**தலைப்பு - 335 தேசிய கல்வி ஆணைக்குழு**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

தலைப்பு 335 – தேசிய கல்வி ஆணைக்குழுவின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான பொருண்மையான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடக்கப்பட்ட, பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் தேசிய கல்வி ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 10 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 மே 15 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேசிய கல்வி ஆணைக்குழுவின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையிலும் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் உபபிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்றிறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டததாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவே அல்லது கூட்டாகவே தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும் ,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்கலில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பிழையானதாக காட்டுவதன் காரணமாக இடம் பெறுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்ளினால் எழும் தாக்கலினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கத்தினை பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களை தயாரித்தல் வேணடுமென்றே விட்டு விடுதல் பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஒன்று ஏற்படுவதற்கு காரணமாகிறது.
- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பெருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டது.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கபட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கபட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| | கடந்த ஆண்டுக்குரிய அறிக்கையின் பந்திக்கான தொடர்பு | நடைமுறைப்படுத்தப்படாத பரிந்துரைகள் | இந்த அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|---|
| (அ) | 3.2(அ) | கல்வி ஆணைக்குழுவின் அதிகாரச்சட்டத்தை அங்கீகரழப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 3.2(அ) |
| (ஆ) | 3.2(ஆ),(இ),(ஈ),(உ) | திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளை எதிர்பார்த்தவாறு நிறைவேற்றிக்கொள்ள இயலுமான அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட வேண்டும். | 3.2(ஆ) |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 50(1) இன் பிரகாரம், வருடாந்த மதிப்பீடுகளை இயலுமான அளவில் சரியானதாக தயாரித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பொன்றாவதுடன், 2022 ஏப்ரல் 26 ஆந் திகதி வெளியிடப்பட்டிருந்த 03/2022 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் வெளிநாட்டு பயணங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ள போது வெளிநாட்டு பிரயாணச் செலவின | 03/2022 ஆம் இலக்க திறைசேறி அறிவுரைகளின் பிரகாரம், வெளிநாட்டு பயணங்கள் மட்டுப்படுத்தப்பட வேண்டியமையால் வெளிநாட்டு பிரயாணச் செலவின விடயத்தின் ரூபா 50,000 தொகையான மொத்த நிதியேற்பாடும் செலவிட விடய இலக்கம் 1302 இற்கு மாற்றப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விடயத்திற்காக ரூபா 50,000 ஆன நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டு அந்த மொத்த தேறிய நிதியேற்பாடும் மற்றுமொரு செலவின விடயத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 50(1) இன் பிரகாரம், வருடாந்த மதிப்பீடுகளை இயலுமான அளவில் சரியானதாக மற்றும் தேவைப்பாட்டினை இனங்கண்டு தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு நிச்சயமான திட்டமொன்றின் கீழ் மதிப்பீடுகள் தயாரிக்கப்படாமையால் மதிப்பீட்டு பெறுமதியில் ரூபா 17,185,000 தொகையான 04 செலவின விடயங்களுக்கு உரியதாக ரூபா 583,800 இலிருந்து ரூபா 2,242,749 வரையிலும் நிதியேற்பாடுகள், அதாவது 27 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான வீச்சில் சேமிப்பு காணப்பட்டது. | 2022 ஆம் ஆண்டு கல்விச் சீர்திருத்தத்தின் கீழ் தேசியக் கல்வி ஆணைக்குழுவை நீக்கி கல்வி அமைச்சின் கீழ் கல்விச் சேவைப் பிரிவாக ஸ்தாபிக்க முன்மொழியப்பட்டதால், அதற்கான செலவீனங்கள் இடைநிறுத்தப்பட்டு, பயன்படுத்தப்படும் இணையதளத்தை தேவைக்கேற்ப மேம்படுத்தி பேணிச் செல்ல முடிவு செய்யப்பட்டது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 1991 இன் 19 ஆம் இலக்க தேசிய கல்வி ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் தேசிய கல்வி ஆணைக்குழுவை நிறுவியமைக்கான ஆரம்ப நோக்கங்களை நிறைவேற்றுதல், அதாவது கல்வி சீர்திருத்தத்திற்காக மேற்கொள்ளப்படும் பரிசோதனைகள் மற்றும் அபிவிருத்திச் செலவினங்களுக்காக ஆணைக்குழுவின் மொத்த நிதியேற்பாடுகளில் 11 சதவீதம் அளவில் அதாவது ரூபா 8,300,000 ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அவற்றுள் ரூபா 2,242,749 ஆன நிதியேற்பாடு ஆண்டின் இறுதியில் எஞ்சியுள்ளது. | பூர்த்தி செய்யப்பட்ட கல்வி ஆராய்ச்சி அறிக்கைகள் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி அச்சீட்டு பணிகளுக்காக அனுப்பப்பட்டன. அந்த நிறுவனங்களின் அச்சுப் பணிகள் தாமதமானதால், அதற்கான கொடுப்பனவுகள் அடுத்த ஆண்டுக்கு கொண்டு செல்லப்பட்டன. | நிறுவனத்தை நிறுவுவதன் நோக்கங்களை அடைய தேவையான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு செயல்படுத்தப்பட வேண்டும். |

## 2.2 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுபடுத்தல்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் பின்வரும் விடயங்கள் தொடர்பில் சான்றுபடுத்தல் வழங்கப்பட வேண்டிய போதிலும், அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| உள்ளகக் கணக்காய்வுப் பணிகளை உரிய முறையில் செயற்படுத்துவதற்காக ஆக்கபூர்வமான நடைமுறையொன்று உள்ளதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டிய போதிலும், நிறுவனத்திற்காக உள்ளகக் கணக்காய்வு அலகொன்று நிறுவப்பட்டிராமையால் அந்த தேவைப்பாடு நிறைவேறியிருக்கவில்லை. | நிறுவனத்தின் நிதிக் கட்டுப்பாட்டுக்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக எழுத்துமூலம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்க சான்றழித்துள்ளமை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| செயலாளரின் 2009 யூன் 17 ஆந் திகதிய 09/2009 மற்றும் 09/2009 (I) ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | தேசிய கல்வி ஆணைக்குழுவின் சில உயர் முகாமைத்துவ உத்தியோகத்தர்கள் சுற்றறிக்கை விதிகளுக்கு மாறாக கைவிரலடையாள பதிவு இயந்திரத்தில் தங்கள் வருகை மற்றும் வெளிச்செல்லலை பதிவு செய்திருக்கவில்லை. | இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளமை. | சுற்றறிக்கை விதிகளின்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பணிப்பொறுப்புகள் நிறைவேற்றப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) 21 ஆம் நூற்றாண்டிற்கு பொருத்தமான கல்விச் சீர்திருத்தமொன்று மேற்கொள்ள உரிய வேலைத்திட்டத்திற்காக 30 ஆண்டுகள் பழமையான ஆணைக்குழு சட்டம் திருத்தப்பட்டு பாரளுமன்றத்தின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கத் திட்டமிடப்பட்டிருந்தாலும், அந்தச் சட்டத்தில் பரிந்துரைக்கப்பட்ட திருத்தங்கள் 2022 ஒக்தோபர் 05 ஆம் திகதி அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், வரிசை அமைச்சினால் அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து தெரிவித்திருக்காமையின் அடிப்படையில் அந்த பணி நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பான மேலதிக நடவடிக்கைகள் தொடர்பில் கல்வி அமைச்சு இதுவரையில் எமது நிறுவனத்திற்கு அறிவிக்கவில்லை. | திட்டமிட்ட பணிகளை நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) 2018 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட நிதி நிலைமைக் கூற்றில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களினுள் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 309,990 வளிச்சீராக்கி இயந்திரம் 2021 ஆம் ஆண்டில் பழுதுபார்ப்பதற்காக தனியார் நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டதுடன் இது வரை திரும்பக் கொணடுவரப்படவில்லை. இதன் காரணமாக, கணக்காய்வின் போது அந்த பெறுமதியுடனான சொத்து இருப்பது உறுதி செய்யப்படவில்லை. | நிறுவனத்திற்கு வளிச்சீராக்கி இயந்திரத்தை கொண்டு வர தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள நிதி அல்லாத சொத்துகளின் நிலவுகை உறுதிப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான தேசிய கல்வி ஆணைக்குழவினால் மேற்கொள்ளப்பட்ட வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் 2022 ஆம் ஆண்டின் போது 03 கெஸட் ரெக்கோடர்கள் மற்றும் 2023 ஆம் ஆண்டின் போது 02 டிஜிட்டல் வொயிஸ் ரெக்கோடர்கள் குறைவாக உள்ளமை அவதானிக்கப்பட்டதுடன், நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு திணைக்களத்தின் பதிவேடுகளை நாளதுவரையாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் பொருள் மெய்மையாய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட குறைவான பொருட்கள் தொடர்பில் நி.பி. பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு உரிய பணிகள் முன்னெடுக்கப்பட்டவாறு உள்ளமை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் அடைந்துகொள்ளப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் ஆணைக்குழவிற்குரியதாக இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் நோக்கங்கள் தொடர்பான தகவல்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறன போதிலும், இது தொடர்பில் சபையின் விடயப்பரப்பானது கல்வி கொள்கைகள் மற்றும் திட்டங்களை தயாரித்தல் என்பதுடன், அந்த கொள்கைகள் மற்றும் திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டிய நிறுவனங்களால் அந்த இலக்குகள் மற்றும் நோக்கங்கள் தயாரிக்கப்பட வேண்டும் என கணக்காய்வுக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. | இந்த நிறுவனத்தின் விடயப்பரப்பிற்கு உரிய பணிப்பொறுப்பு கல்விக் கொள்கைகள் மற்றும் திட்டங்களை உருவாக்குவது ஆகும், மேலும் அந்தக் கொள்கைகள் மற்றும் திட்டங்களை செயல்படுத்த வேண்டிய நிறுவனங்கள் அது தொடர்பாக நிலையான வளர்ச்சி இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை அமைக்க வேண்டும். | திட்டங்களை தயாரிப்பது தொடர்பாக தெளிவான இணக்கப்பாடு எட்டப்பட வேண்டும். |

## 5. நல்லாளுகை

### கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 41 ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழவினால் மீளாய்வு ஆண்டுக்குரிய கணக்காயவு மற்றும் முகாமைத்துவ குழக் கூட்டங்கள் 04 நடாத்தப்பட வேண்டிய போதிலும், ஆண்டினுள் 2 கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன. | 2023 ஆம் ஆண்டினுள் இரு (02) கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் 2023 மார்ச் 17 ஆந் திகதி மற்றும் 2023 திசெம்பர் 20 ஆந் திகதிகளில் நடாத்தப்பட்டுள்ளமை. | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 6. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினுள் உள்ளடக்கப்பட்டுள்ள கணக்காளர் பதவி 2020 ஆகஸ்ட் 26 ஆந் திகதி வெற்றிடமாக காணப்பட்டதுடன், அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காது 2023 நவம்பர் வரையிலும் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக பதிற்கடமை அடிப்படையில் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டனர். | தேசியக் கல்வி ஆணைக்குழுவை இரத்துச் செய்து கல்வி அமைச்சின் கீழ் கல்விப் பிரிவாக நிறுவுவதற்கான முன்மொழிவுகள் காரணமாக தேசிய கல்வி ஆணைக்குழு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது. | வெற்றிடங்களை நிரப்ப வேண்டிய அவசியம் இல்லை என்றால், அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை திருத்தம் செய்ய வேண்டும் அல்லது வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை வேண்டும். |